வாங்கி, வெளிநாடுகளுக்கு அனுப்பி, அன்னியச் செலாவணியைப் பெறுகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அது போன்ற நடவடிக்கைகளை நம்முடைய தமிழக அரசும் மேற் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அன்னியச் செலாவணி எந்த மாநிலத்திற்கும் தனியாகத் தருவதில்லை. நம் மாநிலத்திலிருந்து யாராவது அப்படிச் செய்ய முன்வந்தால், அரசு உதவி கொடுக்க முடியும்.

திரு. மா. இராசாங்கம்: தலைவர் அவர்களே, இந்தத் தவளைகளை இப்பொழுது யாரும் அனுப்பவில்லை என்றாலும், மீண்டும் ஏற்றுமதி தவளை களையாவது அனுப்ப சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தத் தவளைகளையும் அனுப்ப யாராவது முன் வந்தால், அரசாங்கம் உதவியளிக்கும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, தவளைகளை ஏற்றுமதி செய்வது போல், இருக்கல்லையும் கோளக்காரர்கள் எடுக் கிறார்கள். அதையும் நாமே ஏற்றுமதி செய்தால் என்ன என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி தவளை பற்றியது.

வாலாஜாபேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

*183 வினா—திரு. எம். அப்துல் கபூர் சாகிப்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபேட்டையில் உள்ள கூட்டுறவு பட்டு நெசவுத் தொழிற்சங்கத்திற்கு இதுவரை அரசாங்கம் மூலதனமாக எவ்வளவு தொகை கொடுத்துள்ளது?

(இ) இச்சங்கம் நஷ்டத்தில் இயங்கிவருவது அரசுக்குத் தெரியுமா?

(உ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வாலாஜாப்பேட்டை பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு 1957-58-ல் ரூ. 8,750/- பங்கு மூலதனக் கடனாகவும், 1959-60-ல் ரூ. 4,375/- மற்றொரு பங்கு மூலதனக் கடனாகவும் வழங்கியது.

(இ) ஆம்.

(உ) சங்கத்தின் பணிகளை மேம்படுத்துவதற்கும், சங்கம் செவ்விய முறையில் செயல்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. ஆனால், எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் அச்சங்கத்திற்குப் புத்துயிரூட்ட இயலவில்லை. மாவட்டக்

1970 மார்ச் 3]

கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து சங்கம் நடைமுறை மூலதனக் கடனின் கீழ் பெற்ற தொகை வகையில் அச் சங்கம் மத்திய வங்கிக்கு ரூ. 46,268 செலுத்த வேண்டியுள்ளது. 31—3—69 அன்றுள்ளபடி அதற்கு ஏற்பட்ட நிகர விரயம் ரூ. 20,815/-. இச் சங்கத்தைக் கலைத்துவிடக் கருதப்பட்டுள்ளது.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டுக் கூட்டுறவு நெசவுத் தொழிலாளர் சங்கம், அந்தப் பக்கத்தில் இருக்கும் பட்டுத் தொழிலாளர்களுக்கு முக்கியமாக இருக்கும் காரணத்தால், இதை மறுபரிசீலனை செய்து, லாபகரமான அளவில் நடத்த அரசு முயற்சி செய்யுமா ? மூடிவிடாமல் இருக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நடத்துகின்றவர்கள் நாமாக முறையில் விற்பனை செய்து லாபம் காட்டினால், அதை மூட வேண்டாம்.

தமிழகத்தில் புது சர்க்கரை ஆலைகள்

*184 வினு.—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1969 ஜூன் மாதம் முடிய எங்கெங்கு சர்க்கரை ஆலை தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

(இ) தனியார் துறையில் எத்தனை ? கூட்டுறவுத் துறையில் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) விபரங்கள் பின்வருமாறு :—

தென் ஆற்காடு	நெல்லிக்குப்பம்
	பெண்ணாடம்
	முண்டியம்பாக்கம்
	கள்ளக்குறிச்சி
செங்கல்பட்டு	படாளம்
வட ஆற்காடு	ஆம்பூர்
திருச்சிராப்பள்ளி	புகளூர்
	காட்டூர்
	பெட்டவாய்த்தலை
சேலம்	மோகனூர்
தர்மபுரி	திம்மளஉறல்லி
கோயம்புத்தூர்	கிருஷ்ணாபுரம்
	ஆப்பாகுடல்
மதுரை	நிலக்கோட்டை
	பாண்டியராஜபுரம்
தஞ்சாவூர்	வடபாதிமங்கலம்

(இ) தனியார் துறை 9

கூட்டுறவுத் துறை

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS